பைபிளைக்

கற்றுக்கொள்ளுவோம்

பாகம் -9

எபிரேயர் - 1 யோவான்
புஸ்தகங்கள்

YouTube [தமிழ்] ஆடியோவிலும் இதே வேத பாடங்கள் இருக்கின்றன!

அவைகள் அனைத்தும் இந்த பாடங்களுக்கு பொருந்தும் வகையில்
வேதாகமத்திலுள்ள புஸ்தகங்களுக்கு - ஏற்ப
இவைகளிலுள்ள பாகங்களுக்கு - ஏற்ப
பக்கங்களுக்கும் - ஏற்ப
உங்கள் வசதிக்கென்று செய்யப்பட்டிருக்கின்றன!

"பைபிளைக் கற்றுக்கொள்ளுவோம்'' - பாகம்-9

(எபிரேயர் - 1 யோவான் புஸ்தகங்கள்)

YouTube [தமிழ்] ஆடியோ வேத பாடங்களை நீங்கள் கேட்க விரும்பினால்
........கீழ்காணும் Linkகை பயன்படுத்தவும்:

https://www.youtube.com/playlist?list=PL8ZKQeOJ-f2wMqb568F0zNKmwPF7vdIkQ

பைபிள் ஆழங்கள்

பாகம் 9 – பகுதி 1

எபிரேயர்

பாடம் - 1

1. எபிரேயர் புத்தகம், இரட்சிக்கப்பட்ட, இரட்சிக்கப்படாத யூதர்களான அனைத்து எபிரேயர்களுக்கும் ஒருவரால் எழுதப்பட்ட புத்தமாகும்.

2. ஆனால், இந்தப் புத்தகத்தை யார் எழுதியிருக்கிறார் என்பதை வேத பண்டிதர்களால், இன்றுவரை கண்டுபிடிக்க முடியாமலேயே இருக்கிறது.

3. இந்தப் புத்தகம் பிரதானமாக யாருக்காக எழுதப்பட்டது? - **அப்போஸ்தலர் 2:42** – யார் இந்த மக்கள்? – அவர்கள், **கிறிஸ்தவர்களாக மாறி இருந்த யூதர்கள்**. இந்த கிறிஸ்தவர்கள், பாரம்பரிய யூதர்களிடமிருந்து, **"நான்கு விதங்களில்"** வேறுபட்டிருந்தனர். **அவைகள் என்னென்ன?**

i. **முதலாவதாக, "அப்போஸ்தல உபதேசம்":**
அப்போஸ்தலருடைய உபதேசங்கள் என்றால் என்ன?

- ஒவ்வொருவரும் பாவங்களிலிருந்து மனம் திரும்பவேண்டும்.
- யூதர்களுக்கும், ஞானஸ்நானம் தேவையே.
- பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளவேண்டும் - என்று அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்டிருந்த காரியங்களே.

மேலே குறிப்பிடப்பட்டவைகளில் எதையுமே, பாரம்பரிய யூதர்கள் செய்யமாட்டார்கள்.

ii. **இரண்டாவதாக, "அப்போஸ்தல ஐக்கியம்"** - கிறிஸ்தவர்களுக்கு ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ள, சபையில் ஒரு ஒழுங்கு இருந்தது. ஆனால் யூதர்களுக்கு அப்படி எதுவும் இல்லை. அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்கு எப்பொழுது வேண்டுமானாலும் சென்று, பலிகளைச் செலுத்திவிட்டு, ஓடி விடுவார்கள்.

iii. **மூன்றாவதாக, "அப்பம் பிட்குதல்" - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும்**, அவரை **நினைவுகூறுதலின் அடையாளமாகக்** கிறிஸ்தவர்கள், சபையில் விசுவாசத்தோடு அப்பத்தைப்பிட்டு, அதைப் புசித்தும், சிறிது திராட்சரசத்தைப் பருகியும் வந்தார்கள். ஆனால், யூதர்களோ அவைகளைச் செய்யாதது மட்டுமல்ல. அப்படிப் புசித்தவர்களை, மனித மாம்சம் புசித்து, இரத்தம் குடிக்கும் நரமாமிச பட்சிணிகள் என்று கேலியும் செய்தனர்.

iv. **நான்காவதாக, "ஜெபங்கள்"** - கிறிஸ்தவர்கள் நீண்ட நேரம் ஜெபித்தனர். ஆனால், யூதர்களோ, ஒவ்வொருநாளும், குறிப்பிட்ட நேரங்களில், சிறிய ஜெபங்களை மட்டும் ஏறெடுத்தனர்.

ஆகவே, யூதர்கள், கிறிஸ்தவர்களைத் தங்கள் குலத்தின் எதிரிகள் என்று கருதினர். அவர்களை ஒடுக்கவும் துவங்கினார்கள். ஆனாலும், யூதக் குடும்பங்களிலிருந்தும் சிலர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். அதின் விளைவாக, குடும்பங்களுக்குள் பிரிவினைகள் உண்டாகத் துவங்கின.

மேலும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையில் அடிக்கடி ஏற்பட்ட பூசல்களில், ரோம அரசாங்கமும், கிறிஸ்தவர்கள், சிறுபான்மையராக இருந்தபடியால், அவர்களையே ஒடுக்கியது.

எனவே, ஆதிசபையில் இருந்த பல கிறிஸ்தவர்கள், மனம் தளர்ந்துபோய், தாங்கள் கிறிஸ்தவர்களாக மாறியது, ஒரு பெரிய தவறோ என்று எண்ணத் துவங்கினார்கள். அவர்களில் சிலர், தொடர்ந்து கிறிஸ்தவர்களாக இருப்பதா, அல்லது பாரம்பரிய யூத மதத்திற்கு மீண்டும் திரும்பிவிடலாமா, என்றும் யோசிக்க ஆரம்பித்தனர்.

அப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்தி, தொடர்ந்து, அவர்களைக் கிறிஸ்தவர்களாக இருக்கச்செய்ய **ஊக்குவிப்பதற்காகவே,** பிரதானமாக **இந்தப் புத்தகம்** எழுதப்பட்டுள்ளது.

4. ***இந்த ஆசிரியரின் கருத்துப்படி, ஒரு "விசுவாசி" என்பவன் யார்?***

முதலாவதாக - எபிரேயர் 1,2 அதிகாரங்கள்: இந்த உலகத்தில், ஒரு விசுவாசிக்கு மற்ற மனிதர்களை விட, ஒரு மேலான நிலை கொடுக்கப்பட்டுள்ளது என்கிறார். - எப்படி?

ஆதியிலே, தேவன் **மனுஷனைச்** சிருஷ்டித்தபோது, அவனுடைய நிலை என்ன? ***சங்கீதம் 8:5*** – அவன் தேவ தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான்.

ஆனால், ஒரு **விசுவாசியைப்** பொறுத்தவரையில், அது இப்பொழுது எப்படி மாறி உள்ளது? – ***எபிரேயர் 1:4*** – ஒரு விசுவாசியும் ஒரு மனிதனாகவே இருந்தாலும், அவன் தேவதூதர்களைப் பார்க்கிலும், ஒரு மேலான நிலைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறான். - எப்படி?

ஒரு விசுவாசி, தேவனுக்கு அடுத்த காரியங்களில், தனக்கு ஊழியம் செய்யும் படிக்கு, தேவதூதர்களுக்கும் கட்டளைகொடுக்க முடியும். ***எபிரேயர் 1:13,14.***

இதைச் சாத்தியமாக்கியது யார்? - **எபிரேயர் 2:14,15**
– அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான். - எப்படி?

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கு, இந்த பூமிக்கு வந்தபோது, அவர் ஒரு (தேவதூதனின் ரூபம் எடுக்காமல்), மனுஷ ரூபம் எடுத்ததினாலேதான், அது சாத்தியமானது.

பிசாசின் கிரியைகளை அழிக்கக் கர்த்தர் மனுஷரூபம் எடுத்ததினால், தேவனுடைய பிள்ளையாக மாறி இருக்கும் ஒரு **விசுவாசி,** தேவதூதர்களுக்கு மேலாக உயர்த்தப்படுகிறான். எனவே, ஒரு விசுவாசியும் மனிதனாகவே இருந்தாலும், மற்ற மனிதர்களைப்போல, அவனும் **ஒரு சாதாரண மனிதன் அல்ல.** அவனை விட **"மேலானவன்"**, என்று இதன் ஆசிரியர் கூறுகிறார்.

5. இப்படிப்பட்ட உயர்ந்த அந்தஸ்தைப் பெற்ற விசுவாசி ஒருவன், ஒரு சாதாரண யூதனாக மாறுவதின் மூலம், தன்னுடைய அந்த உயர்ந்த அந்தஸ்தை இழந்து போகக்கூடாது என்று, இப்புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார்.

6. **இரண்டாவதாக, - எபிரேயர் 4:11**
   - விசுவாசிகளுக்கு ஒரு இளைப்பாறுதல், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிறதென்றும், அங்கே பாடுகளே கிடையாது என்றும், இதன் ஆசிரியர் விசுவாசிகளை உற்சாகப் படுத்துகிறார்.

   அந்த இளைப்பாறுதல் எங்கே கிடைக்க இருக்கிறது? அது **புதிய எருசலேம் நகரத்தில்,** கோடி கோடியான ஆண்டுகளுக்கு இருக்கும்.

   ஒரு சாதாரண யூதனுக்கு அந்த இளைப்பாறுதல் வாக்குப்பண்ணப்படவில்லை. ஆகையால் நீங்கள் திரும்பவும் ஒரு சாதாரண யூதனாக மாற முயற்சிக்காதீர்கள் என்கிறார்.

   எனவே, இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் வாழும் ஒவ்வொரு விசுவாசியும், தேவனுடைய இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்து, பின்வாங்கிப் போகாமல், தொடர்ந்து ஒரு உண்மைக் கிறிஸ்தவனாகவே நிலைத்திருக்கவேண்டும்.

   கர்த்தராகிய இயேசு நிச்சயமாகவே விரைவில் வந்து, புதிய எருசலேம் நகரில் வாழும் பாக்கியத்தைத் தருவார் என்ற நம்பிக்கையுடன், ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்குள் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும்.

பாடம் - 2

7. ***மூன்றாவதாக - எபிரேயர் 11:39,40*** - இந்த அதிகாரம் முழுவதும், பல பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களின் சாதனைகளையும், உபத்திரவங்களையும், இதன் ஆசிரியர் விவரிக்கிறார். அவர்கள் விசுவாச வீரர்களாக இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டின் **விசுவாசிகளாகிய நாம் இல்லாமல்,** அவர்களுடைய **காப்பாற்றப்படுதல் பூரணமாகாது** என்றும் இதன் ஆக்கியோன் கூறுகிறார்.

   அவர்களுடைய காப்பாற்றப்படுதல் **ஏன் முழுமை பெறவில்லை**? கர்த்தராகிய இயேசுவால் நாம், பெற்றுக்கொண்டுள்ள அந்த **இரட்சிப்பு** அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, பழைய ஏற்பாடு, அனைத்து விசுவாச வீரர்களை விடவும், ஒரு புதிய ஏற்பாடின் சாதாரண விசுவாசியே **"உயர்ந்தவன்"** என்றும், ஆதிசபையில் உள்ளவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

8. ***நான்காவதாக - எபிரேயர் 12:7-13*** – விசுவாசிகள், தங்களுக்கு உபத்திரவங்கள் வருவதினால் சோர்ந்துபோகக்கூடாது என்றும் இந்த ஆசிரியர் கூறுகிறார். – ஏன்?

   ஒரு விசுவாசி, பரதீசுக்குச் சென்றபிறகு, அவனைத் தேவன் தண்டிக்கமுடியாது. எனவே தான், அவன் இந்த உலகத்தில் இருக்கும்போதே, சிட்சிக்கப்பட, தேவன் அனுமதிக்கிறார். அதினிமித்தமே ஒரு விசுவாசி தன்னுடைய இந்த உலக வாழ்க்கையிலே, கிறிஸ்துவினிமித்தம் சில பாடுகளைப் பெற்றுக்கொள்ளுகிறான். ஆனால் அப்படிப்பட்ட பாடுகளினிமித்தம், ஒரு விசுவாசி ஒருபோதும் சோர்வடைந்து விடக்கூடாது என்கிறார். ஏன்? -

   ஒரு வேசியின் பிள்ளையை யாரும் சிட்சிக்கமுடியாது. காரணம் என்ன? நான் தான் அந்தப் பிள்ளையின் தகப்பன் என்று யாரும் உரிமை கோரி அந்தப்பிள்ளையை சிட்சிக்கமுடியாது.

   ஆனால் ஒரு குடும்பத்தின் தகப்பனோ, தன் மகன் ஒழுக்கமாக இருப்பதற்காக, அவனைச் சிட்சிக்கிறான். அப்படியே கர்த்தரும் ஒரு விசுவாசியின் **அன்புத் தகப்பனாக** இருப்பதினால், **அவரும் அவனைச் சிட்சிக்கிறார்.** ஆகையால், ஒரு விசுவாசி, தான் சிட்சிக்கப்படும் நேரங்களில், தனக்கும் ஒரு தகப்பன் இருப்பதாலேயே, தனக்கு அந்தப் பாடுகள் வந்திருக்கின்றன என்று அறிந்து, அதைக்குறித்து **"மகிழ்ச்சியடையவே"** வேண்டும் என்கிறார்.

   எனவே, உங்களுக்கு நேரிடும் உபத்திரவங்களினிமித்தம், நீங்கள் யூத மார்க்கத்துக்குத் திரும்பிவிடவேண்டாம் என்று உற்சாகப்படுத்துகிறார்.

இப்படி பல விதங்களில், யூத விசுவாசிகளை உற்சாகப்படுத்தின பின்பு, இந்த எபிரேய புத்தகத்தின் ஆசிரியர், அவர்கள் மீண்டும் யூத மார்க்கத்திற்கு மாறினால், அவர்கள் சந்திக்கவேண்டிய ஆபத்துக்களைப் பற்றியும், எச்சரிக்கிறார்.

9. **முதலாவதாக, எபிரேயர் 6:4-6** – அவர்கள் பின்மாற்றம் அடைந்தால், அது கர்த்தராகிய இயேசுவை மீண்டும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்துகிறதிற்குச் சமானம் என்று கூறுகிறார்.

   அப்படிப்பட்டவர்களை மனம் திரும்பும்படி, மறுபடியும் புதுப்பிப்பது **முடியாத காரியம்.** ஆகையால், நீங்கள் ஒரு பின்மாற்றம் அடைந்து, உங்களுக்குக் கிடைத்திருக்கும் இரட்சிப்பு என்ற பாக்கியத்தை, இழந்துவிடாதீர்கள் என்கிறார்.

10. **எபிரேயர் 10:29 - இரண்டாவதாக,** ஒரு விசுவாசி யூத மதத்திற்குத் திரும்புவது, அவன் கர்த்தராகிய இயேசுவைக் கீழே தள்ளி, அவரைத் தன்னுடைய காலின் கீழ் மிதிப்பதற்குச் சமமாகும் என்றும், எனவே அதற்கான கொடிய தண்டனையை அவன் தேவனிடம் இருந்து பெறுவது உறுதி என்றும், இதன் ஆக்கியோன் அவர்களை எச்சரிக்கிறார்.

11. தங்கள் பழைய மார்க்கத்துக்குத் திரும்பி, தேவனால் ஆக்கினைக் குள்ளாவதற்குப் பதிலாக, தேவதூதர்களை விடத் தாங்கள் சிறந்தவர்கள் என்பதை உணர்ந்து, சந்தோஷமாக வாழவேண்டும் என்று, யூத விசுவாசிகளை, இந்தப் புத்தகத்தின் மூலம் உற்சாகப் படுத்துகிறார்.

    இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு விசுவாசிக்கும், இது பொருந்தும். விசுவாச வாழ்க்கையிலிருந்து ஒரு போதும் பின்வாங்கக் கூடாது. அப்படி செய்தால், தேவனுடைய கோபம் அவன் மேல் உக்கிரமாக இறங்கும்

பைபிள் ஆழங்கள்

பாகம் 9 – பகுதி 2

யாக்கோபு

1. **யாக்கோபு 1:1** – கர்த்தராகிய இயேசுவின் தெய்வீகப் பிறப்புக்குப் பின்பு, மரியாளுக்கும், யோசேப்புக்கும் பிறந்த பிள்ளைகளில் ஒருவரான யாக்கோபு, இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
2. அவர் கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு, ஆதி சபையின் தலைவரானார்.
3. இந்த நிருபத்தை யாக்கோபு யாருக்கு எழுதுகிறார்? மீண்டும் **யாக்கோபு 1:1** - உலகமெங்கும் **சிதறடிக்கப்பட்ட யூதர்களுக்கு** எழுதுகிறார்.
4. **யார் இந்த சிதறடிக்கப்பட்ட யூதர்கள்? அப்போஸ்தலர் 8:1** – கிறிஸ்தவர்களாக மாறி இருந்த யூதர்கள். சக யூதர்களின் வெறுப்புகளுக்கும், ரோம அரசாங்கத்தின் ஒடுக்குதல்களுக்கும் பயந்து, அவர்களுடைய துன்புறுத்தல்கலிலிருந்து தப்புவதற்காக, உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஓடிப்போனவர்கள்தான், இந்த சிதறடிக்கப்பட்ட யூதர்கள்.
5. **அவர்கள் தஞ்சம் புகுந்த புதிய நாடுகளில், அவர்களுடைய நிலைமை என்ன?**
   - **i.** அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தபடியால், அந்த தேசத்திலிருந்த யூதர்கள் அவர்களை வெறுத்தார்கள்.
   - **ii.** அவர்கள் அடிப்படையில் யூதர்களாக இருந்ததால் அங்கே இருந்த புறஜாதிகளும் அவர்களை வெறுத்தனர்.
6. ஆனாலும், தங்களுக்குக் கிறிஸ்துவினிமித்தம் **பாடுகள் இருந்தாலும்**, அவர்கள் கிறிஸ்துவுக்குள் **எப்படி "வளர்ந்து, முதிர்ச்சியுள்ள" கிறிஸ்தவர்களாக வளருவது**, என்று பல நடைமுறை ஆலோசனைகளை, யாக்கோபு சிதறடிக்கப்பட்டிருந்த அந்த யூதர்களுக்கு, இந்தப் புத்தகத்தில் எழுதுகிறார். அவைகளில் **சிலவற்றை நாம் கற்றுக்கொள்ளுவோம்.**

i. **முதலாவதாக, யாக்கோபு 1:2,3** - இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள '**சோதனை**' என்ற வார்த்தையின் ஒரு அர்த்தம் **"பரீட்சிக்கப்படுதல்"** என்பதாகும். **ஆதியாகமம் 22:1,2.** ஆகிய வசனங்களில் ஆபிரகாம் கடந்துசென்றதும் ஒரு **பரீட்சையே** ஆகும்.
எனவே, யாக்கோபு, நம்முடைய சோதனையின் நேரங்களில், அது நமக்குக் கொடுக்கப்படும் ஒரு பரீட்சையே என்பதை உணர்ந்து அதன் மத்தியில் பொறுமையாயிருந்தாலே நாம் பூரண கிறிஸ்தவர்களாக, மாறமுடியும் என்கிறார்.

ii. **இரண்டாவதாக, யாக்கோபு *1:22*** - கிறிஸ்துவுக்குள் பூரண கிறிஸ்தவனாக மாறுவதுக்குரிய அடுத்த இரகசியம் என்ன? - தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பது மட்டுமல்லாமல், அதின்படி நடப்பதே ஆகும், என்றும் யாக்கோபு சொல்லுகிறார்.

iii. **மூன்றாவதாக, யாக்கோபு *2:8*** - பூரண கிறிஸ்தவனாக மாறுவதற்கு யாக்கோபு கொடுக்கும் மூன்றாவது ஆலோசனை என்ன? - "**உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறனிடமும் அன்பு கூறுவாயாக**", என்னும் ராஜரிக பிரமாணத்தைக் கடைபிடிப்பதேயாகும்.

iv. **நான்காவதாக**, **யாக்கோபு *2:17*** –சிதறடிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவர்களுகத்கு யாக்கோபு கூறும் அடுத்த ஆலோசனை என்ன? - விசுவாசிகள், தங்கள் விசுவாசத்தைச் செயலில் காட்ட வேண்டும். ஏனென்றால், கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. அப்படிச் செயல்களில் காண்பிப்பதின் மூலம்தான், அவர்கள் பூரணராக முடியும் என்கிறார்.

v. **ஐந்தாவதாக, யாக்கோபு *3:8*** – அடுத்து ஒரு விசுவாசி, தன் நாவைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். நாவைக் கட்டுப்படுத்துவதன் மூலமே தான், ஒரு விசுவாசி பூரண கிறிஸ்தவனாகிறான் என்கிறார்.

vi. **ஆறாவதாக, யாக்கோபு *4:7*** –ஒரு விசுவாசி பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் அந்த விசுவாசியை விட்டு ஓடிப்போவான். அதோடு அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு அடங்கி இருக்கவும் வேண்டும், என்கிறார். இவைகளே, அவனைப் பூரண கிறிஸ்தவனாக மாற்றும் என்றும் கூறுகிறார்.

vii. **ஏழாவதாக, யாக்கோபு *4:17*** –ஒரு விசுவாசி வேதத்தை வாசிக்கும் போது நன்மை எது என்று கற்றுக் கொள்ளுகிறான். ஆனால் நன்மை செய்ய வேண்டும் என்று அறிந்திருக்கும் அவன், மற்றவர்களுக்கு நன்மை செய்யாவிட்டால், அதுவே, அவனுக்குப் பாவமாக மாறி விடும் என்றும் யாக்கோபு கூறுகிறார். அது அவனை முதிர்ச்சி அடையாத கிறிஸ்தவனாகத் தேங்க வைத்து விடும் என்றும் யாக்கோபு கூறுகிறார்.

தேவனுடைய பார்வையில், விசுவாசிகள் பூரண கிறிஸ்தவர்களாக மாற, இந்த ஏழு ஆலோசனைகளையும், இந்தப் புத்தகத்தில், யாக்கோபு கூறுகிறார். நாமும் அப்படியே பூரணர்களாக மாறுவோமா? அப்படி நம்மை மாறச்செய்வதே, "**பைபிள் ஆழங்கள்**" என்ற இந்தக் குறிப்புகளின் நோக்கமாகும்.

பைபிள் ஆழங்கள்

பாகம் 9 – பகுதி 3

1 பேதுரு மற்றும் 2 பேதுரு

1 பேதுரு

பாடம் - 1

1. ஒரு சமயம், ரோம அரசனாயிருந்த **நீரோ**, ரோமாபுரி நகரத்தின் ஒரு பகுதிக்குத் **தீ வைத்தான்**. - ஏன்?
அவன் ஒரு கட்டிடப் பிரியன். புது கட்டிடங்களை கட்டுவதில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். எனவே, பழைய வீடுகளுக்குத் தீ வைத்தான்.

2. ரோமாபுரியிலுள்ள வீடுகள் பலவற்றின் தரையும், உள் கூரையும், மரத்தால் செய்யப்பட்டிருக்கும். காரணம் - அது ஒரு குளிர் பிரதேசம். ஏனவே அந்த வீடுகள் எளிதாகத் தீப்பற்றிக்கொள்ளக் கூடியவைகளாயிருந்தன.

3. மேலும், அந்த தீ அணையப்போகும்போது, நீரோவின் வேலையாட்கள் மீண்டும் அவைகளைத் தீக்கொளுத்தியும் விட்டார்கள். அப்பொழுது அந்தப் பகுதியிலிருந்த அத்தனை வீடுகளுமே, எரிந்து சாம்பலாயின.

4. இப்படி நீரோ கொளுத்தின தீ, மூன்று நாட்கள் வரை எரிந்து கொண்டிருந்தது. எனவே ரோமாபுரியின் மக்கள், நீரோவுக்கு எதிராகப் புரட்சிசெய்ய ஆரம்பித்தனர். ஆகையால் மக்கள் தொடர்ந்து தனக்கு எதிராகப் போராட்டம் செய்யாதபடிக்கு, பழியை வேறு யார் மேலாவது போடுவதற்காக, நீரோ ஒரு பலிக்கடாவைத் தேடிக்கொண்டிருந்தான்.

5. அந்த சமயத்தில்தான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **இரண்டாம் வருகையைக்** குறித்து, சபை போதித்துக்கொண்டிருந்தது. கர்த்தரின் **இரண்டாம் வருகைக்குப் பின்பு**, இந்த **உலகம் தீக்கிரையாக்கப்படும்** என்று அவர்கள் சொன்னதை, நீரோ தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டான்.

6. அந்தப் **புதிய விசுவாசிகளும்**, வளர்ந்து வரும் **சபையுமே** தாங்கள் கடைசி காலத்திலிருக்கிறோம் என்றும், கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதென்றும் சொல்லி, மக்களைப் பரவசப்படுத்துகிறதற்காக வீடுகளுக்குத் தீ வைத்தார்கள் என்று பழியை அவர்கள் மேல் போடுவது, நீரோ மன்னனுக்கு எளிதாயிருந்தது.

7. அதின் விளைவு என்ன? ரோம மக்கள் ஆதி கிறிஸ்தவர்களை, **மிருகத்தனமாகத் தாக்கத் துவங்கினர்.**

8. அது மட்டுமல்ல, எரிக்கப்பட்ட வீடுகளின் மக்களுக்காக தானும் துக்கப்படுவதாக நீரோ மன்னன் பாசாங்கு செய்தான். எப்படி? சில விசுவாசிகளைப் பிடித்து, அவர்களை நிலக்கீலில் முக்கி, தீ வைத்து, தன் தோட்டத்தில் மனிதத் தீவட்டிகளாக, அவர்களைத் தொங்கவிட்டான்.

9. சில நாட்களில், விசுவாசிகளுக்கு எதிரான இந்த அட்டகாசம், ரோமப் பேரரசு முழுவதும் பரவியது.

10. ஆகவே, விசுவாசிகள், தங்கள் **பாடுகளை எப்படி எதிர்கொள்ளவேண்டும்** என்று, பேதுரு தன் **முதல் புத்தகத்தில்** எழுதுகிறார். **கடினமான சூழ்நிலைகளில்,** எப்படி **இந்த உலகில் வாழ வேண்டும்** என்று, இந்த நவீன கால விசுவாசிகளுக்கும், அவை **பாடமாக** அமைந்துள்ளன.

11. **முதலாவதாக, *1 பேதுரு 2:13-17*** – விசுவாசிகளுக்குக் **கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் இருந்தாலும்,** அதன் மத்தியிலும் அவர்கள் **எப்படி நடந்துகொள்ள வேண்டும்** என்று பேதுரு ஆலோசனை கூறுகிறார்.

விசுவாசிகள்: **i.** நாட்டின் சட்டங்குகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்.
ii. நற்காரியங்களைத் தொடர்ந்து செய்யவேண்டும்.
iii. ராஜாக்களையும், எல்லா மனுஷரையும் கனம் பண்ணவேண்டும்.
iv. அயலாரை நேசிக்கவேண்டும்.
v. தேவனுக்குப் பயப்படவேண்டும், என்கிறார்.

12. **இரண்டாவதாக, *1 பேதுரு 4:13-17* - கர்த்தராகிய இயேசுவின் "பாடுகளை" நினைத்துக்கொள்ளும்படி,** பேதுரு விசுவாசிகளைக் கேட்டுக்கொள்ளுகிறார். – ஏன்? - இயேசு கிறிஸ்துவின் பாடுகளுடன், தங்களுடைய பாடுகளை **ஒப்பிட்டுப் பார்த்தால்,** அவர்களுடைய **பாடுகள் ஒன்றுமேயில்லை,** என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள முடியும் என்கிறார்.

ஒரு கிறிஸ்தவன் கொலை செய்து அல்லது களவு செய்து பாடுபட்டால், அதில் கர்த்தர் பிரியப்படமாட்டார். ஆனால் அவன் **ஒரு கிறிஸ்தவனாக இருப்பதினிமித்தம், அநியாயமாகப் பாடுபட்டால்,** அதுவே தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்கிறார்.

13. **மூன்றாவதாக, *1பேதுரு 2:19-23*** – ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்காகப் பாடுபடுவதும் ஒரு அழைப்பே ஆகும் என்கிறார். எனவே, கிறிஸ்துவுக்காகப் பாடுபடும் ஒரு விசுவாசி, அதைப்பற்றி மகிழ்ச்சியடையவே வேண்டும். ஏன்? – அவன், தேவனுடைய கண்களில் அந்த விசேஷித்த அழைப்புக்குத் தகுதியானவனாகக் காணப்பட்டதாலேயே, அந்த பாடுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறான் என்று பேதுரு கூறுகிறார்.

14. ***நான்காவதாக, 1 பேதுரு 2:18*** – அடுத்து, அந்நாட்களில் இருந்த **விசுவாசிகளாக மாறியிருந்த அடிமைகள்,** தேவனுக்காகப் **பாடுபடும்போது,** அவர்கள் **என்ன செய்யவேண்டும்** என்று பேதுரு சொல்லுகிறார்.

அந்த நாட்களில் சுமார் 6 கோடி அடிமைகள், ரோமப் பேரரசு முழுவதும் இருந்தனர்.

'அடிமைகள்' என்றால் இழிவான வேலைகளைச் செய்தவர்கள் மாத்திரம் அல்ல. ரோமர்கள் ஒரு நாட்டின் மேல் வெற்றி பெறும்போது, தோற்கடிக்கப்பட்ட நாட்டின் மக்கள், அனைவரையும் அடிமைகளாக, ரோமாபுரிக்கு ஓட்டிக்கொண்டு வந்து விடுவார்கள்.

அவர்கள் மத்தியில் பல மருத்துவர்கள், பொறியாளர்கள், நீதிபதிகள் போன்றவர்களும் இருப்பார்கள். அவர்கள்தான் அனைத்து வேலைகளையும், ரோமர்களுக்குச் செய்துகொடுக்கவேண்டும். ரோமர்கள் எத்தனை அடிமைகளை வேண்டுமானாலும் அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ரோமர்கள், தங்கள் உடல் உழைப்பை உபயோகித்து எந்தக் கடினமான வேலையையும் செய்ய மாட்டார்கள். மற்றவர்கள் மூலம் தங்கள் வாழ்க்கையை சுகபோகமாக அனுபவித்துக்கொண்டு மாத்திரம் இருப்பார்கள்.

இந்த அடிமைகளுக்கு திருமணம் செய்துகொள்ள உரிமைகள் கிடையாது. ஆனால், தாங்கள் தங்கி இருக்கும் முகாம்களில், யாருடன் வேண்டுமானாலும், பாலுறவுகள் செய்துகொள்ளலாம். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், அரசுக்குச் சொந்தமானவர்களாக இருப்பார்கள்.

அந்நாட்களில், அடிமைகளின் நிலைமை அப்படி இருக்கையில், அவர்களில் சிலர் கர்த்தரால் **இரட்சிக்கப்பட்டார்கள்.** எனவே பேதுரு, அப்படி இரட்சிக்கப்பட்ட அடிமைகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும், என்று அவர்களுக்குப் போதிக்கிறார்.

சபைக்குள்ளே அவர்கள் எந்தப் **பாகுபாடுமின்றி,** எல்லாரையும் போல **அனுமதிக்கப்பட்டார்கள்.** ஆனால் சபையிலிருந்து **தங்கள் முகாம்களுக்குத் திரும்பிச்சென்ற பிறகு,** அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைத்தான், இந்த வசனத்தில் பேதுரு குறிப்பிடுகிறார்.

இரட்சிக்கப்பட்ட பின்பு, தங்கள் எஜமான்களுக்கு, முன்பு செய்ததை விட இன்னும் அதிக கீழ்ப்படிதலுள்ளவர்களாக நடந்து, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று பேதுரு கூறுகிறார். சாந்தமும், நற்குணமும் உள்ள எஜமான்களுக்கு மட்டுமல்ல; கொடிய முரட்டு குணம் உள்ளவர்களிடமும் அப்படியே நடந்துகொள்ளவேண்டும் என்கிறார்.

பாடம் - 2

15. **ஐந்தாவதாக,**

1 **பேதுரு** *3:1,2*

– அடுத்ததாக, **சில யூதப் பெண்களும் இரட்சிக்கப்பட்டு,** சபைக்கு வரத்துவங்கினர்.

எனவே, அவர்களில், **மனைவிகளாக** இருப்பவர்கள் **எப்படி நடந்துகொள்ள வேண்டும்** என்றும் பேதுரு எழுதுகிறார்.

அந்நாட்களில், யூதப்பெண்களுக்குக் குடும்பத்தில் எந்த உரிமைகளும் கிடையாது. ஆண்கள் அவர்களை ஆடு, மாடுகளைப் போலத்தான் நடத்துவார்கள்.

ஒரு மனைவியின் நிலைமை இப்படி இருக்கையில், அவள் **இரட்சிக்கப்படும் போது,** அவளிடம் **காணப்படவேண்டிய மாற்றங்களைத்தான்,** இந்த வசனங்களில் ஆலோசனைகளாகப் பேதுரு கூறுகின்றார்.

ஒரு மனைவியானவள் :

i. இரட்சிக்கப்பட்ட பின்பு, தன் புருஷனுக்கு முன் இருந்ததை விட **இன்னும் அதிகமாகக் கீழ்ப்படியவேண்டும்.**
ii. **கற்புள்ளவளாக இருக்கவேண்டும்.**
iii. தனக்கு, அவனைப் புருஷனாகக் கொடுத்ததற்காகக் **கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும்.**
iv. தன் புருஷனை, முன்பை விட **மிகுதியாக நேசிக்கவேண்டும்** என்று கூறுகிறார்.

அது வரைக்கும், அவள் ஒரு ஜடப் பொருள் போல்தான் அவனுக்கு இருந்தாள். ஆனால் விசுவாசியாக மாறின பின்போ, அவள் தன் கணவனுடைய விருப்பு வெறுப்புகளைத் தெரிந்துகொண்டு, உணவு உட்பட எல்லாக்காரியங்களிளும் அவனைப் பிரியப்படுத்தவேண்டும் என்கிறார்.

அவள் புருஷன் ஒரு முரடனாக இருந்தாலும் அவள் **தன்னுடைய நடத்தையினாலேயே,** அவனைக் **கிறிஸ்துவுக்குள், வழி நடத்தவேண்டும்** என்றும் பேதுரு கூறுகிறார்.

ஒரு உண்மைச் சம்பவம்:

லின்டா ஒரு இளம் பெண். அவள் ஒரு நல்ல வேலையிலிருந்தாள்.

டோனி ஒரு இளம் வாலிபன். கம்பீரமான தோற்றத்துடன், எல்லோருடனும் சரளமாகப் பேசி, யாவரின் கவனத்தையும் ஈர்ப்பவனாக இருந்தான். ஆனால் அவனுக்கு வேலை இல்லை.

அவர்கள் இருவரும் நண்பர்களானார்கள். டோனியின் தோற்றத்தாலும், நகைச்சுவைப் பேச்சாலும் கவரப்பட்டு, லின்டா அவனை விரும்பினாள். இருவரும் ஒருவரையொருவர் திருமணம் செய்துகொண்டனர்.

பின்புதான், அவன் ஒரு பெரிய குடிகாரன் என்றும், பல பணக்காரப் பெண்களுடன் பழக்கம் உள்ளவன் என்றும், அவர்கள் மூலம் பெரும் தொகைகளைப் பெற்றுக்கொண்டதால்தான், அவன் எந்த வேலைகளுக்கும் போகவில்லை என்றும், லின்டாவுக்குத் தெரியவந்தது. எனவே, லின்டா அவனை விவாகரத்துச் செய்யத் திட்டமிட்டாள்.

இதற்கிடையில், லின்டா **இரட்சிக்கப்பட்டு**, இந்த ***1* பேதுரு *3:1,2*** வசனங்களை வாசித்தாள். **அந்த வசனங்கள்** அவள் **எண்ணத்தை மாற்றியது**. டோனியை **விவாகரத்துச் செய்யவேண்டும்** என்ற எண்ணத்தை **அடியோடு கைவிட்டாள்.**

முதல் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து, மூன்று மாதங்களுக்குப் பின்பு, டோனி லின்டாவை விட்டுப் பிரிந்துசென்று, பல பெண்களுடன் உல்லாசமாக வாழ்ந்தான். ஒரு வருடம் கழித்துத்தான் வீடு திரும்பினான்.

சில மாதங்கள் கழிந்தன. லின்டா மீண்டும் கருவுற்றாள். மீண்டும் டோனி வீட்டைவிட்டுச் சென்று, இன்னும் ஒரு வருடம் கழித்தே திரும்பினான்.

ஆனால் லின்டாவோ, ஒன்றுமே நடந்துவிடாததுபோல, அவனை வரவேற்றாள். நடந்தவைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவனிடம் பேசவேயில்லை, அவன் எங்கு சென்றான் என்ன செய்தான் என்று எந்தக் குறுக்கு விசாரணைகளைச் செய்துகொண்டிருக்கவும் இல்லை.

அவனிடம் ஒரு மட்டு மிஞ்சிய ன்பைக் காண்பித்தாள். அவனுக்குப் பிரியமான உணவுகளையே செய்துகொடுத்து, அவனுடன் எப்போதும் அன்புடனேயே பேசிக்கொண்டிருந்தாள்.

டோனி சிந்திக்க ஆரம்பித்தான்!

அவன் அநேகந் தரம் **அவளுக்குத் துரோகம் செய்திருந்தபோதிலும்** அதை **அவள் நன்றாக அறிந்திருந்தபோதிலும்,** அவளால் எப்படி அவனிடம் **அந்த அளவு அன்பு செலுத்த** முடிந்ததென்பதே அவன் கேள்வியாக இருந்தது.

அவளுடைய **"இரட்சிப்பின்" அனுபவமே** அவளை, அவ்வளவு அன்பு நிறைந்தவளாக மாற்றியுள்ளது என்பதை அவன் அறிந்துகொண்டான்.

எனவே, அவனும் கர்த்தராகிய இயேசுவைத் **தன் சொந்த இரட்சகராக** ஏற்றுக் கொண்டான்.

அடுத்த ஐம்பது ஆண்டுகள், அவன் ஒரு பொறுப்புள்ள கணவனாக லின்டாவுக்கும், ஒரு பொறுப்புள்ள தந்தையாக தங்கள் பிள்ளைகளுக்கும் நடந்து கொண்டான்.

அது எப்படி சாத்தியமாயிற்று?

லின்டாவின் **நடத்தையினாலேயே** அது சாத்தியமானது.

அப்படியே ஒரு விசுவாசியான மனைவியின் "நடத்தையினாலேயே", அவளுடைய அவிசுவாசக் கணவனும் கூட குணம் மாறி, இரட்சிக்கப்படுவான், என்று பேதுரு கூறுகிறார்.

2 பேதுரு

1. இந்த **இரண்டாவது நிருபத்தைப்** பேதுரு, விசுவாசிகளுக்குத் தன் கடைசி நாட்களில் எழுதியதால், பேதுரு, **பொதுவான சில ஆலோசனைகளைக்** கொடுக்கிறார்.

   முதலாவதாக, *2* பேதுரு *1:13* - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை **அறியும் அறிவில்** ஒரு விசுவாசி **வளர**, பல காரியங்களைப் பேதுரு எழுதி, அவைகளில் அவர்கள் **"வளரவேண்டும்"** என்கிறார். **அவைகள் என்னென்ன?**
   - **i.** விசுவாசம்.
   - **ii.** நற்குணம்.
   - **iii.** ஞானம்.
   - **iv.** இச்சையடக்கம்.
   - **v.** பொறுமை.
   - **vi.** தேவபக்தி.
   - **vii.** சகோதர சிநேகம்.
   - **viii.** அன்பு.

2. **இரண்டாவதாக, *2* பேதுரு *2:20*** – எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் **பின்மாற்றம்** அடையும் ஒரு விசுவாசியைக் குறித்து என்னென்ன எச்சரிக்கைகளை எழுதியிருக்கிறாரோ, அவைகளையே பேதுருவும் எழுதுகின்றார்.

   இரட்சிப்பிற்கு முன்பாகத் தான் செய்துகொண்டிருந்த பாவங்களில் ஒரு விசுவாசி சிக்கிக்கொண்டால், அவனுடைய பின்னிலைமை, அவன் இரட்சிப்புக்கு முன்பாக இருந்த நிலைமையை விட, மிகவும் மோசமாக இருக்கும் என்று பேதுரு கூறுகிறார்.

3. **மூன்றாவதாக, *2* பேதுரு *3:10-13*** – சில **இறுதிகால சம்பவங்களைப்** பற்றியும் பேதுரு எழுதுகிறார். கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்** பின்பு, வானங்கள் மகா சத்தத்துடன் அகன்றுபோகும் என்றும் இந்த பூமி எரிந்து அழிந்துபோகும் என்றும், அதின் பின்பு, **புதிய வானமும்,** ஒரு **புதிய பூமியும்** உருவாகும், என்றும் பேதுரு கூறுகிறார்.

   இன்னும் அநேகர் **புதிய பூமியில்** வாழத் **தகுதியானவர்களாக மாற்றப்படும் படிக்கே** கர்த்தரின் இரண்டாம் வருகை இன்னும் தாமதப்படுகிறது, என்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **இரண்டாம் வருகை** ஏன் தாமதமாகிறது என்ற காரணத்தையும் பேதுரு விளக்குகிறார். – ***1* பேதுரு *3:9***

பைபிள் ஆழங்கள்

பாகம் 9 – பகுதி 4

1 யோவான்

பாடம் - 1

1. *கிறிஸ்தவர்கள் பொதுவாக,* ***"மூன்று காரணங்களுக்காக" வேதத்தை வாசிக்கிறார்கள்.***

   i. வேதத்தின் கதைகளை வாசித்து, அவைகளைத் தங்கள் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொடுப்பதற்காக.
   ii. வேத வினாப்போட்டிகளில் கலந்துகொண்டு, பரிசுகளைப் பெறுவதற்காக.
   iii. வாக்குத்தத்த வசனங்களை மனப்பாடம் செய்து, தேவனிடமிருந்து சில நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு, அவைகளைத் தங்கள் ஜெபங்களில் பயன்படுத்துவதற்காக.

2. *ஆனால்,* ***ஒரு "விசுவாசி" எதற்காக வேதத்தை வாசிக்கவேண்டும்?***

   தன் வாழ்க்கையில் தான் செய்யும் ***தவறுகளை அறிந்துகொண்டு, மனம் திரும்பி, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை நடத்துவதற்காகவே****, ஒரு மனிதன், வேதத்தைப் படிக்கவேண்டும்.*

   கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலர்களின் ***போதனைகளை அறிந்துகொண்டு,*** *அவைகளின்படி தன்* ***வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளவே,*** *அவன் வேதத்தைப் படிக்கவேண்டும்.*

3. *வேதத்தின் வேறு எந்தப் புத்தகங்களையும் விட, யோவானின் நிருபங்கள், இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளை, ஒரு விசுவாசி தன்னுடைய* ***"நடைமுறை வாழ்க்கையில்" பயன்படுத்துவது எப்படி,*** *என்பதைக் குறித்துத் தெளிவாகப் போதிக்கின்றன. அவைகளில் சிலவற்றைக் கற்றுக்கொள்ளுவோம்.*

4. *முதலாவதாக, 1 யோவான் 2:6 – நாம் கிறிஸ்தவர்களாயிருந்து கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறோமென்று சொல்லுவோமானால்,* ***இயேசு கிறிஸ்து நடந்தபடியே நாமும் நடக்கவேண்டும்.*** *என்று யோவான் கூறுகிறார்.*

ஒரு உண்மைச் சம்பவம்:

ஜாக் விட்சன் ஒரு பிரசித்தி பெற்ற பிரசங்கியார். அவர் ஒரு நிறுவனத்தின் தலைவர்.

அவர் **"பிறரிடம் அன்பு செலுத்துவது"** என்னும் தலைப்பில், ஒரு **மூன்று நாள் கருத்தரங்கை**, ஒரு நகரத்தில் ஒழுங்கு செய்திருந்தார்.

சுமார் நூறு பேர் அதில் கலந்துகொண்டனர். ஆ வர்கள் தங்குவதற்கு ஒரு மண்டபத்தை ஒழுங்கு செய்து, அவர்களுக்கு உணவும் ஒழுங்கு செய்திருந்தார்.

ஜிம், அந்தக்கருத்தரங்கில் கலந்துகொண்டு, **ஜாக்** பேசுவதை நேரில் கேட்க மிகவும் ஆவலாயிருந்ததால், தானும் தன் பெயரைப் பதிவு செய்துகொண்டான். ஆனால், அவன் **முகத்தில்** உள்ள **தசைகள் சரிவர வேலை செய்ய முடியாதவைகளாக** இருந்தன. அவனுடைய வாயின் தசைகளால், அவனுடைய உணவுகளைச் சரிவர பிடித்துக்கொள்ள முடியாமலிருந்தது.

முதல் நாள் காலைவேளைக் கூட்டம் முடிந்ததும், அனைவரும் மதிய உணவுக்கு ஒன்று கூடினர். **ஜிம்** தன் உணவைச் சாப்பிடத் துவங்கினான். ஆனால், அவனால் தன் உணவை முழுவதுமாகத் தன் வாயில் பிடித்துக்கொள்ள முடியாததால், அவைகளின் ஒரு பகுதி, மேஜையின் மேலேயே விழுந்தது.

ஒவ்வொரு முறையும் அவன் சாப்பிட முயற்சித்தபோது, அப்படியே உணவு கீழே சிந்தியது. அவனருகில் அமர்ந்திருந்தவர்கள் ஒவ்வொருவராக எழுந்து, வேறு மேஜைகளுக்குச் சென்றனர். **ஜிம்** தனித்து விடப்பட்டான். மூன்று நாட்களிலும் அப்படியே நடந்தது.

கருத்தரங்கின் கடைசி நாள் வந்தது. கடைசிப் பகுதியும் முடிவடைந்தது. அப்பொழுது, பிரசங்கியாரான **ஜாக் விட்சன்,** உணவருந்த அந்த உணவுக் கூடத்திற்குள் வந்தார். எல்லாரும் அவரைத் தங்கள் மேஜைக்கு வந்து உணவருந்துமாறு கேட்டுக்கொண்டனர். அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் விரும்பினர்.

ஆனால், **ஜாக்,** அவர்கள் அனைவரையும் கடந்து, கடைசியில் **ஜிம்** அநாகரீகமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்த, அந்த மேஜைக்குச் சென்றார். அவனுடன் வேடிக்கையாகப் பேசி, அசிங்கமாக அவன் சாப்பிடும் விதத்தைப் பொருட்படுத்தாமல் இருந்தார். **ஜிம்** மேல் **"அன்பு செலுத்தி"**, அனைவரின் முன்பாக அவனைக் கனப்படுத்தினார்.

கிறிஸ்து நடந்தபடியே, அவர் யாரையும் புறம்பே தள்ளாததைப் போலவே தாமும் நடந்து, **ஜாக்** தான் **ஒரு "கிறிஸ்தவன்"** என்று நிரூபித்தார்.

அப்படியே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் **மற்றவர்களிடம் அன்புகூறவேண்டும்.** அப்பொழுதுதான், அவன் தன்னைக் **கிறிஸ்தவன்** என்று சொல்லிக்கொள்ள முடியும்.

5. ***இரண்டாவதாக – 1 யோவான் 2:16*** – சாத்தான், மக்களைத் தன் ராஜ்யத்திற்குள் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தும் **மூன்று கண்ணிகளை** யோவான் வரிசைப் படுத்துகிறார்.
   i. **கண்களின்** இச்சை.
   ii. **மாம்சத்தின்** இச்சை.
   iii. ஜீவனத்தின் **பெருமை**

ஒரு பெரிய தேவ மனிதன், **தனக்குள் "இரண்டு நாய்கள்" வசிப்பதாக**, தன்னுடைய செய்தியில் சொன்னார். ஒன்று நல்ல நாய். மற்றொன்று கெட்ட நாய். அவருக்குள் அவை இரண்டும் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தன, என்றும் அவர் சொன்னார்.

அந்த நல்ல நாய், அவர் எப்பொழுதும் நல்ல காரியங்களையே செய்ய வேண்டுமென்றே விரும்பியது. ஆனால் அந்தக் கெட்ட நாயோ, அவர் எப்பொழுதும் துஷ்டமானவைகளையே செய்ய விரும்பியது, என்று சொல்லி விட்டு சபையாரைப் பார்த்து, இந்த இரண்டு நாய்களில், **எந்த நாய் எனக்குள்ளாக ஜெயிக்கிறது** என்று தெரியுமா என்று கேட்டார்.

கூடியிருந்தவர்கள் பல்வேறு பதில்களைக் கூறினர். அந்த தேவ மனிதன் சொன்னார், **"நான் எந்த நாய்க்கு அதிகமாகச் சாப்பாடு போடுவேனோ, அந்த நாய்தான் ஜெயிக்கிறது"** என்றார்.

ஆகவே, இது ஒரு விசுவாசியின் கையில்தான் உள்ளது. அவன், அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவற்றில் வளரத் தீர்மானித்தால், அவன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு முதிர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுவான்.

அப்படியில்லாமல், அவன் மேலே சொல்லப்பட்ட அந்த சாத்தானின் மூன்று கண்ணிகளுக்கும் இடம் கொடுத்துவிடுவானானால், அவன் தன் ஆவிக்குரிய வாழ்க்கையில் குன்றிப்போவதோடு, அவனால் பிறர்மேல் அன்பு செலுத்தவும் முடியாது என்றும் அவர் விளக்கினார்.

பாடம் - 2

6. ***மூன்றாவதாக, 1 யோவான் 3:17*** – ஒரு விசுவாசி **"ஐசுவரியவானாக"** இருக்கலாமா? அதைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?
நமக்கு ஐசுவரியத்தைத் தருகிறவர் கர்த்தரே. எனவே ஒரு விசவாசி பணக்காரனா யிருப்பது தவறல்ல. ஆனால், தனக்கு அதிகப்படியாக இருக்கும் தன் ஐசுவரியத்தை வைத்து, ஒரு விசுவாசி **செய்யவேண்டியது என்ன** என்பதையே யோவான் இந்த வசனத்தில் கூறுகிறார். அவன் அதை ஏழை எளியவர்களுக்குத் **தாராளமாகக் கொடுக்கவேண்டும்** என்கிறார். இதையேதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுமே சொல்லி இருந்தார் - **லூக்கா 16:9.**

7. **நான்காவதாக, *1 யோவான் 3:23*** – **பத்து கற்பனைகளையும்** யோவான் **ஒரே வசனத்தில் சுருக்கிவிடுகிறார்**. அதில் உள்ள **"இரண்டு பகுதிகள்"** என்னென்ன?

முதலாவது பகுதி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மட்டுமே நாம் விசவாசிக்கவேண்டும் என்று கூறுகிறது. **முதல் 4 கற்பனைகளின்** சுருக்கமும் இதுதான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒருவன் முழு மனதோடு விசுவாசிக்கும்போது, அவன் வேறு எந்த கடவுளையும் வணங்கமாட்டான், எந்த சொரூபங்களையும் உண்டுபண்ணமாட்டான், தேவனுடைய நாமத்தை வீனிலே வழங்கமாட்டான், ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிப்பான். இயேசுவானவரே, தனக்கு எல்லாவற்றிற்கும் போதும் என்பான்.

இரண்டாவது பகுதி, ஒரு விசுவாசி, பிறரிடம் முழுமையாக அன்புகூரவேண்டும், என்று கூறுகிறது. **கடைசி 6 கற்பனைகளின்** உள்ளடக்கமும் அதுவேதான்.

ஒருவருக்கொருவர் உதவுவது – விசேஷமாக **"எளியவர்களுக்கு உதவவேண்டும்"** என்பது வேதத்தின் பிரதான போதனைகளில் ஒன்று ஆகும். ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வரை, இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

முதலாவதாக,
உபாகமம் *15:11* - இஸ்ரவேலர்களுக்கு இதை தேவன் ஆலோசனையாகக் கொடுக்காமல், ஒரு **கட்டளையாகவே** கொடுத்திருக்கிறார்.

இரண்டாவதாக,

லேவியராகமம் *19:9,10* - இஸ்ரவேல் மக்கள், தேவன் வாக்குத்தத்தம் செய்த கானான் நாட்டைச் சென்றடைந்த பின்பு, தாங்கள் விலைகொடுத்து வாங்காமலே பெற்ற திராட்சைத் தோட்டங்களில் அறுவடை செய்யும்போது, கீழே சிந்திக் கிடக்கிற திராட்சைப் பழங்களைப் **பொறுக்காமல்,** அவைகளை **எளியவர்களுக்கும், பரதேசிகளுக்கும் விட்டுவிடவேண்டும்** என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். ஏன்?

– அவர்கள் அந்த நிலங்களைச் சம்பாதிக்கவில்லை. அவைகள் **தேவனுடையவைகள்.** அவைகளை அவர்கள் **எப்படிப் பயன்படுத்தவேண்டும்** என்பதைத் தீர்மானிக்க, **கர்த்தருக்கு உரிமை உண்டு** என்பதால் அவர் எளியவர்களின் மேல் தமக்கு இருந்த கரிசனையை இதன் மூலம் வெளிப்படுத்துகிறார்.

மூன்றாவதாக,

உபாகமம் *15:7,8,10* - இஸ்ரவேல் மக்கள், தாராளமாக ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றும், அப்படிச் செய்யும்போது, அவர்கள் **கைகளின் கிரியைகள் தானாகவே ஆசீர்வதிக்கப்படும்** என்றும், அவர்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் என்றும் தேவன் சொல்லுகின்றார்.

அப்படியானால், ஒரு விசுவாசி தொடர்ந்து தன் வாழ்க்கையில் **தோல்விகளைச் சந்தித்துக்கொண்டேயிருக்கும்போது**, அவன் **என்ன செய்ய வேண்டும்**?

அவன், விழுந்து விழுந்து ஜெபம்பண்ண வேண்டியதில்லை – ஒரு தேவனுடைய ஊழியக்காரனைத் தேடிப்பிடித்து, அவனுக்காக ஜெபிக்குமாறு, கேட்கத்தேவையில்லை. அவன் செய்யவேண்டியது என்ன? **ஏழைகளுக்கு உதவி செய்யத் துவங்கவேண்டும்.** அப்பொழுது அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு, அவன் செய்யும் காரியங்கள் எல்லாம், **தானாகவே வாய்க்கத்துவங்கும்.**

நீதிமொழிகள் *19:17* – ஏழைகளுக்கு உதவுவதைப் பற்றி சாலோமோன் என்ன கூறுகிறார்?

தேவன் எப்படிப்பட்டவர்? **ஆகாய் *2:8*; உபாகமம் *10:14*** - இந்த அண்ட சராசரம் முழுவதுமே தேவனுக்குத்தான் சொந்தமானது. அவருக்கு எந்தக் குறைவுகளுமே கிடையாது. அவர் அப்படிப்பட்ட சர்வ ஐசுவரியம் நிறைந்தவர். ஆனாலும் அவர் கூட **ஏழைக்கு உதவுபவனிடம் ஒரு கடனாளியாகிவிடுகிறார்** என்கிறார். எப்படி? ஏழைக்கு அவன் கொடுத்திருந்த அந்தப் பணத்தை **தாமே அவனிடம் கடன்வாங்கியிருப்பதைப்போல எண்ணி**, கர்த்தர் அந்த நபரிடம் திரும்பக் கொடுத்து விடுகிறார்.

8. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில், **ஏழைகளுக்கு உதவுவது.** அவ்வளவு முக்கியமான காரியமாகையால், **அவன் செய்யவேண்டியதென்ன**?

ஒரு வேத பண்டிதர் இப்படி **ஒரு நடைமுறை ஆலோசனையைக்** கொடுக்கிறார்.

மாதச் சம்பளம் வாங்குபவர்கள், தாங்கள் சம்பளம் வாங்கிய உடனேயே, தேவனுக்குரிய **தசம பாகத்தை எடுத்துவைப்பதைப் போலவே**, இன்னொரு **பத்தில் ஒரு பங்கை, அந்த ஒரு மாதத்தில் மட்டும், "ஏழைகளுக்கு உதவுவதற்கென்று" எடுத்து வைக்கவேண்டும்.**

அந்தத் தொகையை, அந்த மாதம் முழுவதும் அவன் சந்திக்கும் ஏழைகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும் - அப்பொழுது, **நீதிமொழிகள் 19:17**இன்படி, அந்த மாதம் முடிவடைவதற்கு முன்பாகவே, அந்தப் பணம் **தேவனால் அவனுக்குத் திருப்பித் தந்துவிடப்படும்.**

அந்தப் பணத்தை அவன், **இரண்டாவது மாதத்திலும்,** ஏழைகளுக்கு உதவுவதற்கு பயன்படுத்தவேண்டும். இரண்டாவது மாதத்தின் முடிவிலும் அது அவனுக்குத் தேவனால் திருப்பித்தரப்படும்.

இப்படியே ஏழைகளுக்கு உதவுவதற்கென்று, **"ஒரே ஒரு மாதத்தில்" எடுத்துவைத்த** அந்தத் தொகையை, தேவன் மாதாதமும் திருப்பித்தருவதால், தன் **வாழ்நாள் முழுவதுமே,** அந்த விசுவாசி **ஏழைகளுக்கு உதவலாம்.**

அதனுடைய பலன் என்ன? அந்த விசுவாசியின் **பரலோக வங்கிக் கணக்கில்**, உள்ள இருப்புப்பணம், ஒவ்வொரு மாதமும் பெருகிக்கொண்டே போகும். அவன் இந்த உலகத்தை விட்டு, தேவனுக்கு முன்பாக நிற்கும்பொது, **அதின் பலனைப் பெறுவான்.**

9. இப்படி ஒரு **விசுவாசி ஏழைகளுக்கு உதவுவதையும்,** அதன் மூலம் **மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதையும்,** பிசாசானவன் எப்படித் தடுக்க முயற்சிக்கின்றான்?

அவனைச் **சுயநலம் மிக்க** ஒரு மனிதனாக மாற்றி விடுவதின் மூலமே. ஏனென்றால், ஒரு சுயநலவாதி, யாருக்கும் எந்த உதவிகளையும் செய்யவும் மாட்டான். யார் மேலும் அன்பைக் காண்பிக்கவும் மாட்டான்.

10. கொஞ்சம் கூட சுயநலமே இல்லாத ஒரு நபரைப் பற்றிய **ஒரு உண்மைச் சம்பவம்:**

பென்ஜமின் ஒரு **"தேவனுடைய ஊழியக்காரர்".** அவருக்கு **டோனி** என்ற 10 வயது மகன் இருந்தான். அவன் மறுபடிபிறந்த அனுபவமுள்ள ஒரு சிறுவன்.

டோனிக்கு, **மார்ட்டின்** மறுபடியும் பிறவாத ஒரு நண்பன் இருந்தான். இருவரும், தங்களை, மீன்பிடிக்க அழைத்துச் செல்லுமாறு பென்ஜமினைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக, பென்ஜமின் ஒரு சிறுபடகில் அவர்களை மீன் பிடிக்க அழைத்துச் சென்றார்.

ஆனால் திடீரென்று காற்று வேகமாக வீசியது. அவர்கள் மூவரும் கரைக்கு வேகமாகத் திரும்ப முயற்சித்தனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. அந்தப் படகில், உயிர் காக்கும் சட்டை, ஒன்றுதானிருந்தது. நீந்தத் தெரியாத ஒருவர் மட்டுமே, அதைப் பயன்படுத்தி, தண்ணீரில் முழுகிவிடாமல் தப்பிக் கொள்ள முடியும்.

பென்ஜமின் ஒரு நிமிடம் யோசித்தார். **டோனி** ஏற்கனவே **இரட்சிக்கப்பட்டு விட்டான்.** ஆனால் **மார்ட்டினோ** இன்னும் **இரட்சிக்கப்படவில்லை.** எனவே அந்த உயிர்காக்கும் சட்டையை சிறிதும் தன்னலம் பாராமல், **மார்ட்டினுக்குப் போட்டுவிட்டார்.** படகு மூழ்கத் துவங்கியது. பென்ஜமின் தன் மகன் டோனியை முத்தம் செய்து, **"டோனி, நாம் நித்தியத்தில் சந்திப்போம்"**, என்று சொல்லி விடைபெற்றார்.

டோனியின் சரீரம் கண்டுபிடிக்கப்படவே இல்லை. பென்ஜமின் நீந்திக் கரை சேர்ந்தார். மார்ட்டினும் உயிர் காக்கும் சட்டை அணிந்திருந்ததால், அவனும் உயிர் தப்பிக் கரை சேர்ந்தான். இந்த சம்பவத்தில் பென்ஜமீன் சுயநலத்துடன், தன் மகனைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. மாறாக மார்ட்டினையே மரணத்திலிருந்து காப்பாற்றினார். ஏன்? மார்ட்டின் அவனுடைய மரணத்துக்கு முன்பாக, இரட்சிக்கப்பட்டுவிட அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு நித்தியஜீவன் கிடைக்கும் என்பதாலேயே அப்படிச் செய்தார். பின்பு, மார்ட்டின் இரட்சிக்கப்பட்டு, ஒரு ஊழியக்காரன் ஆனான்.

இன்னொரு சிறுவனின் மேல் உள்ள அன்பினால் சுயநலமின்றி, தன் மகனையே தியாகம் செய்ததினால் பென்ஜமின் அடைந்த பலன் என்ன? டோனியின் மரணத்திற்குப் பிறகு, தேவனிடமிருந்து அவர் இன்னும் இரண்டு குமாரர்களைப் பெற்றுக்கொண்டார்.

அப்படியே, ஒரு விசுவாசி தன் வாழ்க்கையில் ஒருபோதும் **சுயநலமான காரியங்களைச் செய்யவே கூடாது**.

ஒரு விசுவாசி, **தன்னிடம் "சுயநலம்" உள்ளதா**, **இல்லையா** என்பதை **எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?**

சில உதாரணங்கள்:

i. ஒரு விசுவாசி ஒரு காய்கறிக் கடைக்குச் செல்லுகிறான். பொதுவாக, எல்லாரும் நல்ல தரமான காய்கறிகளையே பொறுக்கி எடுப்பார்கள்.

ஆனால் அந்த விசுவாசி, எப்பொழுது கடைக்காரரின் நஷ்டத்தைக் குறைப்பதற்காக, சில சொத்தையான காய்கறிகளையும் சேர்த்து அப்படியே அள்ளிக்கொள்ளுவானோ, அப்பொழுதுதான், அவன் ஒரு சுயநலமில்லாதவன் என்பதை வெளிப்படுத்துவான்.

ii. ஒரு விசுவாசி ஒரு வரிசையில் நிற்கிறான். வரிசை நகர்ந்து, அவன் முதலிடத்திற்கும் வந்து விடுகிறான். அப்பொழுது, ஒரு முன் பின் தெரியாத ஒருவர், அவனிடம் ஓடிவந்து ஒரு அவசரமான காரியத்தினிமித்தம் முதல் இடத்தில் நிற்க, தனக்கு அனுமதிகொடுக்கும்படி, அந்த விசுவாசியைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறார்.

அப்பொழுது, வரிசையில் நிற்பவர்கள் எல்லாரும் அவரைப் பார்த்து சத்தம்போட்டு, பின்னாலே போய் நில்லுயா என்று கத்துகிறார்கள்.

ஆனால் எப்பொழுது அந்த விசுவாசி, தான் நின்ற முதல் இடத்தை அவருக்கு விட்டுக்கொடுத்து விட்டு, தான் திரும்பவும் போய் வரிசையின் கடைசி இடத்தில் நின்றுகொள்ளுவானானோ, அப்பொழுதே அவன் தான் ஒரு சுயநலமில்லாதவன் என்பதைக் காண்பிப்பான்.

iii. ஒரு விசுவாசி உயர்ந்த சம்பளம் உள்ள ஒரு வேலைக்கு விண்ணப்பித்து ள்ளான். எழுத்துத் தேர்வில் வெற்றிபெற்று, குழு உரையாடலிலும் தேர்ந்தெடுக் கப்பட்டு, இறுதி நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்டுவிட்டான்.

அப்பொழுது அவனைப்பற்றி எப்பொழுதுமே கேவலமாகப் பேசிக்கொண்டும், அவனைக் குறைகூறிக்கொண்டே இருக்கும் இன்னொருவனும், அந்த நேர்முகத் தேரிவில் ஆஜராக அடுத்த ஒரே நபராகத் தெரிந்தெடுக்கப்படுகிறான்.

ஆனால் எப்பொழுது, அந்த மற்றொருவனுக்கு அந்த வேலை கிடைத்து விடும்படிக்கு, அந்த விசுவாசி நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளாமலேயே விட்டுக்கொடுத்துவிடுவானோ, அப்பொழுதே, தான் ஒரு சுயநலமற்றவன் என்பதைக் காண்பிப்பான்.

ஆனால் அந்த விசுவாசியைச் சுற்றியுள்ளவர்கள், அவனைப் பார்த்து என்ன சொல்லுவார்கள்.

அவன் ஒரு **முட்டாள்** என்றும், இந்த **உலகத்தில் வாழத் தகுதியற்றவன்** என்றுமே சொல்லுவார்கள். ஆனால் இந்த உலகத்தின் காரியங்களில் முட்டாளாக ஒரு விசுவாசி இருக்கும்போதே, அவன் **சுயநலமற்றவனாக இருந்து,** கிறிஸ்துவின் சாயலில் வளரத் துவங்கவான்.

தன்னலமற்றவனாக இருக்கும் பொழுதுதான், ஒரு விசவாசியால் மற்றவர்களிடம் **அன்புகூற முடியும்**. அப்போஸ்தலராகிய யோவான், தம்முடைய முதல் நிருபத்தில், ஒருவரிடத்தில் ஒருவர் **அன்பு செலுத்துவதைக்** குறித்து, இப்படிப் பல காரியங்களை, அருமையாக எழுதியுள்ளார்.